# இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்


உனக்கு அடுத்திருப்பவரிடம் அன்பு கூர்வாயாக', 'பகைவரிடம் வெறுப்புக் கொள்வாயாக' எனக் கூறியிருப்பதைக் கேட்டிருக்கிறீர்கள். ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன்: உங்கள் பகைவரிடமும் அன்பு கூருங்கள்; உங்களைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள். இப்படிச் செய்வதால் நீங்கள் உங்கள் விண்ணகத் தந்தையின் மக்கள் ஆவீர்கள். ஏனெனில் அவர் நல்லோர் மேலும் தீயோர் மேலும் தம் கதிரவனை உதித்தெழச் செய்கிறார். (மத் 5:43-45)



# இயேசுவின் பெயரால், வெறுப்பு ஆயுதங்களை கீழே போடுங்கள்!

## திருத்தந்தை வலியுறுத்தல்

தென் சூடான்: முழு உலகமும் போரால் தன்னை அழித்துக்கொண்டு வருகிறது என்றும் இதனை நாம் சரியான நேரத்தில் முடிவுக்குக் கொண்டுவரவேண்டும் என்றும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

கடந்த பிப்ரவரி 5, ஞாயிறன்று, தென் சூடானில் தனது திருத்தூதுப் பயணத்தை முடித்துக்கொண்டு உரோமைக்குத் திரும்பும் வழியில் விமானத்தில் செய்தியாளர்களிடம் இவ்வாறு தெரிவித்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஓரினச்சேர்க்கையாளர்கள், மற்றும் இறைவனடி சேர்ந்த முன்னாள் திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட் குறித்த கேள்விகளுக்கும் பதிலளித்தார்.

ஆப்ரிக்க நாடுகளில் நிகழ்ந்து வரும் வன்முறை குறித்த கேள்விக்குப் பதிலளித்த போது, வன்முறை ஒரு அன்றாட செய்தியாகிவிட்டது என்றும் தென் சூடானில் இப்போதுதான் அதனைப் பார்த்தோம். ஆனால், வன்முறையை தூண்டும் வழிமுறைகளைப் பார்க்கும் போது மிகவும் வேதனையாக இருக்கிறது என்றும் கருத்துரைத்தத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஆயுத வர்த்தகம்தான் உலகிலேயே மிகப்பெரிய கொள்ளை நோய் என்று தான் நினைப்பதாகவும், அதனை ஓராண்டிற்கு நிறுத்தினாலே போதும், உலகத்தின் வறுமையைப் போக்கிவிட முடியும் என்று தன்னிடம் ஒருவர் கூறியதாகவும் எடுத்துரைத்தார்.
தென்சூடானின் தலைவர்களிடம் மண்டியிட்டு வேண்டி அமைதிக்கான அந்நாட்டில் வழிகளை மேற்கொள்ள வேண்டுமென நீங்கள் கேட்டுக்கொண்டது போல, உங்களுக்கு வாய்ப்புக் கிடைத்தால் இரஷ்ய அதிபர் விளாடிமிர் புதினிடமும் இவ்வாறு செய்வீர்களா என்ற கேள்விக்குப் பதிலளித்த



*திருத்தந்தை பிரான்சிஸ் தென் சூடான் ஜூபாவில் திருப்பலி கொண்டாடுகிறார்.*

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இரஷ்யா, உக்ரைன் ஆகிய இருநாட்டுத் தலைவர்களையும் சந்திப்பதற்கு நான் திறந்த மனதுடன் காத்திருக்கின்றேன் என்றும் தெரிவித்தார்.

தென்சூடான், காங்கோ நாடுகளிலும் தீய ஆவி அவர்களை பிடித்திருக்கின்றது என்று கருதப்பட்டு ஓரினச்சேர்க்கையாளர்கள் அவர்களின் குடும்பங்களில் வெறுத்தொதுக்கப்படுகின்றனரே. இதுகுறித்து அவர்தம் குடும்பங்களுக்கும், ஆயர்களுக்கும், அருள்பணியாளர்களுக்கும் என்ன சொல்ல விரும்புகின்றீர்கள் என்று கேள்விக்கு ஓரினச்சேர்க்கைப் போக்குள்ள ஒருவர் இறைநம்பிக்கையாளராக இருந்துக்கொண்டு கடவுளைத் தேடினால், அவரைக்குறித்து தீர்ப்பிடுவதற்கு நான் யார் என்று நான் பிரேசில் நாட்டிலிருந்து திரும்பும் வழியில் கூறியிருக்கிறேன் என்றும், இரண்டாவதாக, அயர்லாந்திலிருந்து திரும்புகையில், இது குறித்த ஒரு இளைஞர் எழுதி வெளியிட்ட கடிதத்திற்கு, இப்படிப்பட்ட குழந்தைகள் வீட்டில் இருக்க உரிமை உண்டு; நீங்கள் அவர்களை வீட்டை விட்டு வெளியேற்ற முடியாது என்று கூறியதாகவும் விவரித்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

தென் சூடானில், நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது கெண்டபுரி ஆங்கிலிக்கன் பேராயர் Justin Welby. மற்றும் ஸ்காட்லாந்து கிறிஸ்தவ சபைகளின் ஒருங்கிணைப்பாளர் Iain Greenshields இருவரும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுடன் உடனிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது

மேலும், ஞாயிற்றுக்கிழமை தெற்கு சூடானில் நடந்த திருப்பலியில் திருத்தந்தை பிரான்சிஸ், போரினால் பாதிக்கப்பட்ட ஆப்பிரிக்க நாட்டில் உள்ள கிறிஸ்தவர்களை, தீமைக்கு எதிராக தீமை செய்யவதை மறுப்பதன் மூலம் "வரலாற்றை மாற்றுவதில் தீர்க்கமான பங்களிப்பை" செய்யுமாறு வலியுறுத்தினார்.

"இயேசுவின் பெயராலும் அவருடைய அருட்கொடைகளின் பெயராலும், இறைவேண்டல் மற்றும் தொண்டு போன்றவற்றை எடுத்துக்கொள்வதற்காக, வெறுப்பு மற்றும் பழிவாங்கும் ஆயுதங்களை கீழே வைப்போம்" என்று பிப்ரவரி 5 அன்று ஜூபாவில் கொண்டாடப்பட்ட திருப்பலியில் மறையுரையில் அவர் வலியுறுத்தினார். இத்திருப்பலியில் 100,000க்கும் அதிகமானோர் கலந்துகொண்டனர்.

*செல்வராஜ் சூசைமாணிக்கம - வத்திக்கான்*

# ஜொகூர் புனித அமலோற்பவ அன்னை பங்கில் பொங்கல் கொண்டாட்டம்

ஜொகூர் பாரு: கடந்த 5 பிப்ரவரி 2023, ஞாயிறன்று இங்குள்ள புனித அமலோற்பவ அன்னை பங்கில் பொங்கல் மிகவும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. சிறப்பு நன்றி திருப்பலியுடன் தமிழ் பண்பாட்டு பின்னணியில் அமைந்த கலை நிகழ்ச்சியும் கொண்டாட்டத்திற்கு சிறப்பு சேர்த்தன. ஏறக்குறைய 450 பேர் பங்கேற்ற இக்கொண்டாட்டத்தில் பத்து அடிப்படை திருஅவை சமூகங்கள் இணைந்து பங்கேற்றன.

அன்றைய திருப்பலியிலும் கலை படைப்புகளிலும் தெற்கு மறைவட்டத்தைச் (Johor South Vicariate) சேர்ந்த அருள்தந்தையர்கள் சிரில் மண்ணாயகம், மைக்கல் மண்ணாயகம், எட்ரியன், எடி இராயப்பன் மற்றும் கிளவ்ரன்ஸ் ஆகிய ஐவரும் கலந்து சிறப்பித்தனர் சிறுவர்களின் பொங்கல் பானை அலங்கரிப்பு, அ.தி.சமூகங்களின் பொங்கல் தயாரிப்பு, பூமாலை தொடுத்தல், தோரனம் பின்னுதல், ஆகியவற்றோடு மாலை 5.30 மணிக்கு திருப்பலி ஆரம்பமானது. அதனை தொடர்ந்து, இரவு 7.00 மணியளவில், கலைநிகழ்ச்சியும், வாழை இலை உணவும், சிறப்பு பட்டி மன்றமும் நிகழ்ச்சியை மேலும் அலங்கரித்தன என்றால் மிகையாகாது.




*தமிழ் பண்பாட்டு உடையில் அருள்தந்தை சிரில் மண்ணாயகம்*



*ஆலய வளாகத்தில் பத்து அ. தி. சமூகங்கள் கூடி சமைக்கும் பொங்கல்*

இக்கொண்டாட்டத்தின்போது, சகோ. எட்ரியன் நாதன், மற்றும் சகோ. மெக்டலின் ஆகியோர் நிகழ்ச்சி தொகுப்பாளர்களாக பணிகேற்றிருந்தனர். அன்றைய திருப்பலியும் பொங்கலும் சமூகங்களைக் கட்டியெழுப்பும், ஒன்றித்துப் பயணிக்கும் அழைப்பை மையமாகக் கொண்டிருந்தன.

# நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு திருத்தந்தை இரங்கல்

வத்திக்கான்: வடமேற்கு சிரியா, தென் கிழக்கு துருக்கி ஆகிய பகுதிகளில் ஏற்பட்ட நில நடுக்கத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தனது ஆன்மீக உடனிருப்பையும் ஆறுதலையும் தெரிவித்து இரங்கல் தந்திகளை அனுப்பியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

பிப்ரவரி 6 திங்கள்கிழமை, அதிகாலை துருக்கிக்கும் சிரியாவுக்கும் இடையில் உள்ள Kahramanmaras என்னும்



பகுதியில் ஏற்பட்ட பயங்கரமான திடீர் நிலநடுக்கத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்ததற்கும் காயமடைந்ததற்கும் தனது ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்தி இரங்கல் தந்தியினை அந்நாடுகளின் திருப்பீடத்தூதர்களுக்கு அனுப்பியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்

தென்கிழக்கு துருக்கியின் திருப்பீடத்தூதர் கர்தினால் MAREK SOLCZYŃSKI மற்றும் வடகிழக்கு சிரியாவின் திருப்பீடத்தூதர் கர்தினால் MARIO ZENARI ஆகிய இருவருக்கும் திருப்பீடச்செயலர் கர்தினால் பியெத்ரோ பரோலின் அவர்கள் கையெழுத்திட்டு திருத்தந்தையின் பெயரால் அவ்விரங்கல் தந்திகள் அனுப்பப்பட்டுள்ளன.

எல்லாம்வல்ல இறைவனின் அருள்கரத்தில் இறந்தவர்களை ஒப்படைத்து அவர்களின் ஆன்மா நிறையமைதி பெற செபிப்பதாகவும், பாதிக்கப்பட்டவர்களுக்குத் தன் ஆன்மிக உடனிருப்பை அளிப்பதாகவும் அவ்விரங்கல் தந்தியில் குறிப்பிட்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், நிவாரணப்பணிகளில் ஈடுபடுவோர்க்கு இறைவனின் வல்லமை அதிகமாகக் கிடைக்கப்பெற்று விடாமுயற்சியுடன் அவர்கள் செயல்பட தொடர்ந்து செபிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

5,000க்கும் மேற்பட்ட உயிரிழப்புக்களை ஏற்படுத்தியுள்ள இந்நிலநடுக்கத்தால் தென் கிழக்கு துருக்கியில் 1900-க்கும் மேற்பட்டோர் மற்றும் சிரியாவில் 1000-க்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளாதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இரண்டு பகுதிகளையும் தாக்கியுள்ள மிக மோசமான நிலநடுக்கங்கள் 7.9 மற்றும் 7.5 ரிக்டர் அளவை எட்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நூற்றுக்கணக்கானோர் இன்னும் இடிபாடுகளுக்கு அடியில் சிக்கியிருப்பதாகவும், மீட்புப் பணியாளர்கள் அப்பகுதி முழுவதும் உள்ள நகரங்கள் மற்றும் கட்டிடங்களின் இடிபாடுகளில் தொடர் மீட்புப்பணிகளை செய்துகொண்டிருப்பதால் உயிரிழந்தோர் மற்றும் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை இன்னும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவும் கூறப்படுகின்றது.

# அன்னை மரியா 'சீயோன் மகள்' என்று அழைக்கப்படுகிறார். சீயோன் மகள் என்பது மரியாவுக்கு எப்படி பொருந்தும்?

K. திரேசம்மாள்

சீயோன் என்பது ஓர் எபிரேயச் சொல். இதற்கு அறன், தடுப்பு காவல் அல்லது கோட்டை என்று பொருள் கொள்ளலாம். விவிலியத்தில் அதிலும் குறிப்பாக பழைய ஏற்பாட்டின் பின்னணியில் எருசலேம், தாவீதின் நகர் மற்றும் சீயோன் என்பன ஒரே பொருளைத் தருவதாக உள்ளன. சீயோன் மலை என்பது கடவுள் வாழும் புனித இடமாகவும் யூதர்கள் எண்ணினர். 'என் திருமலையாகிய சீயோனில் நானே என் அரசரைத் திருநிலைப்படுத்தினேன்.' (திபா 2:6) என்று கடவுள் கூறுகிறார். மேலும், 'நீங்கள் வந்து சேர்ந்திருக்கும் சீயோன் மலை வாழும் கடவுளின் நகர்; விண்ணக எருசலேம். அதனைப் பல்லாயிரக் கணக்கான வானதூதர் சூழ்ந்துள்ளனர் (எபி 12:22) என்றும் வாசிக்கிறோம். ஆகவே, சீயோன் என்பதை கடவுளின் நகர் என்றும், விண்ணக எருசலேம்' என்றும் நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

அக்காலத்தில் இஸ்ரயேலை ஒரு பெண்ணாக உருவகப்படுத்தி இறைவாக்கினர் போதித்தனர்.

மகளே சீயோன்! மகிழ்ச்சியால் ஆர்ப்பரி; இஸ்ரயேலே! ஆரவாரம் செய்; மகளே எருசலேம்! உன் முழு உள்ளத்தோடு அகமகிழ்ந்து அக்களி என இறைவாக்கினர் செப்பானியா அழைப்பு விடுத்தார் (3:14) மகளே சீயோன்! மகிழ்ந்து களிகூறு; மகளே எருசலேம்! ஆர்ப்பரி என இறைவாக்கினர் செக்காரியா (9:9) முழங்கினார்.

இவ்வாறாக மற்றும் சில இடங்களில் சீயோன், இஸ்ரயேல் சீயோனின் மகள் என்று அழைக்கப்பட்டது.

மகளே சீயோன்! மகிழ்ந்து களிகூரு; மகளே எருசலேம்! ஆர்ப்பரி. இதோ! உன் அரசர் உன்னிடம் வருகிறார்.(செக் 9;9) என்பது, 'கடவுள் உம்முடன் இருக்கிறார்' என்ற மரியாவுக்கான கபிரியேல் தூதரின் செய்தியோடு நன்கு பொருந்துகிறது அல்லவா?

இதன்வழி அன்னை மரியாவும் சீயோன் மகளென உருவகப்படுத்தப்படுகிறார். அன்னை மரியாவும் தன் கருவில் கடவுளைத் தாங்கியிருந்தார், கடவுளும் அவரோடு இருந்தார். ஆகவே, மரியாவும் கடவுள் வாழும் சீயோன் மலையாக உருவகப்படுத்தப்படுக்கிறார். இதன் பொருளின் அடிப்படையில்தான் இயேசுவும் சீயோன் மகளான அன்னை மரியாவை 'பெண்ணே' கானா ஊர் திருமணத்திலும் சிலுவை அடியினிலும் குறிப்பிடுகிறார் என்று கூறலாம்.

*-ஆர்.கே*

# இணையதள பாதுகாப்பு நாள்

இணையதள பாதுகாப்பு நாள் என்பது ஐரோப்பிய ஐக்கிய நாடுகளால் 2004 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட சர்வதேச விழிப்புணர்வு நாளாகும். இணையத்தைப் பயன்படுத்துவதில் உள்ள அபாயங்களைக் கண்டறிந்து மக்கள் ஒவ்வொருவரும் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி இரண்டாவது வாரத்தின் இரண்டாவது நாளில் அகில உலக இணையதள பாதுகாப்பு நாள் கொண்டாடப்படுகின்றது




அவ்வகையில் இவ்வாண்டு (2023) பிப்ரவரி மாதம் 7ஆம் தேதி சிறப்பிக்கப்பட்டது.

# மாற்றத்தைக் கண்டு மாறுவது அன்பல்ல!

இன்று ஆண்டின் பொதுக்காலத்தின் ஏழாம் ஞாயிறுவில் இணைந்துள்ளோம். லேவியர் நூலிலிருந்து எடுக்கப்பட்ட இன்றைய முதல் வாசகத்தில் "உன் சகோதரரை உன் உள்ளத்தில் பகைக்காதே!, பழிக்குப் பழியென உன் இனத்தார்மேல் காழ்ப்புக் கொள்ளாதே, உன்மீது நீ அன்புகூர்வது போல், உனக்கு அடுத்திருப்பவர்மீதும் அன்புகூர்வாயாக" என்று படிக்கிறோம். ஆம், நாம் ஒவ்வொருவரும் நம்முடைய உள்ளத்தில் இருக்கும் பகைமையை வேரறுத்துவிட்டு ஒருவர் ஒருவரை அன்பு செய்ய வேண்டியவர்கள்.

உலகப் புகழ் பெற்ற வங்காள கவிஞர் இரவீந்தரநாத் தாகூர் "அன்பு செய்வதிலும், அன்பு செய்யப்படுவதிலும் வாழ்வின் இரகசியம் அடங்கியுள்ளது" என்று கூறுகிறார். நாம் நம்மைத் திரும்ப அன்பு செய்பவர்களை அன்பு செய்து வாழ்வது சிறப்பான அன்பு வாழ்க்கை அல்ல. மாறாக நம்மை திரும்ப அன்பு செய்ய முடியாதவர்களை அன்பு செய்து வாழ்வது சிறப்பான அன்பு வாழ்க்கை. எதையும் எதிர்பார்த்து அன்பு செய்வது அன்பு அல்ல. எங்கு செல்ல முடியாதோ அங்கு சென்று, எதை செய்ய முடியாதோ அதைச் செய்து வாழ்வது உயர்ந்த, உத்தம, உன்னத அன்பு வாழ்வாகும்.

தூய பவுல் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்திலிருந்து எடுக்கப்பட்ட இன்றைய இரண்டாம் வாசகத்தில், "நீங்கள் கடவுளுடைய கோவில் என்றும், கடவுளின் ஆவியார் உங்களில் குடியிருக்கிறார் என்றும் உங்களுக்குத் தெரியாதா? ஒருவர் கடவுளின் கோவிலை அழித்தால் கடவுள் அவரை அழித்துவிடுவார். ஏனெனில் கடவுளின் கோவில் தூயது; நீங்களே அக்கோவில்' என்கிறார் புனித பவுல் அடிகள்.

எனவே, யாராலும் அன்பு செய்யப்படாதவரை அன்பு செய்வதிலும் உலகமே ஒதுக்கிய சூழ்நிலையில் முகவரி இழந்த மனிதரை அன்பு செய்வதிலும்தான் மனித நேயத்தின் இரகசியம் அடங்கியுள்ளது. பலநேரங்களில் நாம், நமக்கு பிடிக்காத மனிதர்களுக்கு அல்லது நமக்கு எதிராகச் செயல்படுபவர்களுக்கு என்னென்ன தீமை எல்லாமோ செய்கிறோம். உண்மையில் நாம் சக மனிதர்களுக்குத் தீமை செய்கிறபோது அதனை கடவுளுக்கே செய்கிறோம் என்பதுதான் உணமை.

கடவுள் அன்பாக இருக்கிறார். அன்பு செய்தாருக்குப் பதிலன்பு காட்டுவது சாதாரண மானிடப் பண்பு. நம்மை வெறுப்பவருக்கும் அன்பு காட்டுவது, நன்மை செய்வது என்பது தெய்வீகப் பண்பாகும், இதைத்தான் கிறிஸ்து வாழ்ந்து கற்றுக்கொடுக்கிறார். அதுவே நமக்கான போதனையும் கட்டளையும் ஆகும். தூயவராய் வாழ்வதுவே நிறைவான வாழ்வு. இத்தகைய நிறைவான வாழ்வுக்கு அன்பு ஒன்றையே ஆதாரமாக கொண்டு வாழ்ந்திடல் வேண்டும். இதுவே நம்மை தூயவராய் மாற்றும். அத்தகைய வாழ்வுக்கே நாம் அழைக்கப்பட்டு இருக்கின்றோம். அப்பொழுது தான் நாம் அவரை தூயவர் என்றழைக்க தகுதியும் பெறுகின்றோம் என்பதை நினைவில்கொள்வோம்.

கண்ணுக்கு கண், பல்லுக்கு பல்; எனும் வஞ்சம் தீர்க்காது கடின மனத்தை விட்டொழிப்போம். அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்? எனும் திருவள்ளுவர் கூற்றையும் மனதில் கொள்வோம்

ஆ.வி.டேவிட். குளுவாங்

**ஆண்டின் பொதுக்காலம் 7-ம் ஞாயிறு**

| | |
|---|---|
| 1-ம் வாசகம் | லேவி 19: 1-2, 17-18 |
| தி. பாடல்: | 103: 1-2. 3-4. 8,10. 12-13 |
| வாசகம்: | 1 கொரி 3: 16-23 |
| நற்செய்தி: | மத் 5: 38-48 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 1**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 1**
**திருப்புகழ் மாலை- வாரம் 2**